**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் நாள் புதன்கிழமை**

**O.S. 60/2022**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW5-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சஹானா பெனாசிர்** | **தாலுக்கா** | : | **திருவாரூர்** |
| **த/பெ** | : | **ஷேக் அலாவுதீன்** | **கிராமம்** | : | **புதுப்பத்தூர்** |
| **ஜாதி** | : | **முஸ்லிம் லெப்பை** | **தொழில்** | : | **கிராம நிர்வாக அலுவலர், புதுப்பத்தூர்.** |
| **சமயம்** | : | **முஸ்லிம்** | **வயது** | : | **33** |

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் புதுப்பத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் இன்றைய தினம் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 2023 லிருந்து புதுப்பத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பாக செப்டம்பர் 2017 லிருந்து 2022 ம் ஆண்டுவரை திருக்காரவாசல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். என்னிடம் காட்டப்படும் 10.09.2020 ம் தேதியிட்ட சான்று நகல் என்னால் சிந்துஜா பெயருக்கு வழங்கப்பட்டது தான். (**மேற்படி சான்றின் நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

மேற்படி வா.சா.ஆ.6 சான்று ஸ்தலத்திற்கு சென்று நேரடியாக பார்வையிட்டு பின்பு

என்னால் வழங்கப்பட்டது. நான் கண்டு பார்த்தபோது வாதி ராமச்சந்திரன் என்பவர் தான் சாகுபடி செய்து வந்தார். மேற்படி வாதி ராமச்சந்திரனும், அவரது குடும்பத்தார்களும் தாவா கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் சரிதான். திருவாரூர் விளமலில் குடியிருந்து வருகிறார்கள். தாவா சொத்திற்கு அருகில் பிரதிவாதி ராமன் சாகுபடி செய்து வருகிறார் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி சான்று ராமச்சந்திரன் என்னிடம் வந்து பெற்று சென்றார். மேற்படி சான்று ராமச்சந்திரன் சாகுபடி செய்வதாக தான் கொடுக்கப்பட்டது. சிந்துஜா என்னிடம் சான்று கேட்கவில்லை. என் முன்னிலையில் விண்ணப்பதாரர் கையொப்பம் செய்தால் தான் சான்று கொடுப்பேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.6 ல் சிந்துஜா என்பவர் என் முன்னிலையில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி ராமச்சந்திரன் என்ன தொழில் செய்கிறார் என்றால் பார் வைத்து நடத்தி வருகிறார். வாதி ராமச்சந்திரனுக்கு தாவா சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் உள்ளது என்றாலும், அதை அவர் சாகுபடி செய்கிறாரா என்றாலும் அவர் தான் சாகுபடி செய்து வருகிறார். 2017 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் வாதியின் தம்பியான ராமன் தான் தாவா இடத்தில் சாகுபடி செய்து வந்தார் என்றாலும், நான் வாதி பெயருக்கு தவறாக சான்று வழங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை நான் நேரடியாக பார்வையிடாத காரணத்தினால் தான் ராமச்சந்திரன் பெயருக்கு சான்று வழங்காமல் அவரது மகள் சிந்துஜா பெயருக்கு சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சிந்துஜா என்பவர் நேரில் முன்னிலையாகி விண்ணப்பம் கொடுக்காமல் அவர் பெயரில் சான்று வழங்கப்பட்டுள்ளது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சாகுபடி செய்வதால் தான் நான் சிந்துஜா பெயருக்கு சான்று வழங்கினேன். மேற்படி குடும்ப உறுப்பினர்களில் பிரதிவாதி ராமனையும் சேர்த்து தானே என்றால் ராமச்சந்திரன் குடும்ப

உறுப்பினர்கள் மட்டும் சாகுபடி செய்கிறார்கள். தாவா சொத்தில் வாதி வழக்குமூல தேதியில் சாகுபடி செய்யவில்லை என்றாலும், வாதி கேட்டுக் கொண்டதற்காக வாதியின் மகள் பெயரில் பொய்யாக சான்று வழங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதி பார் வைத்து தொழில் செய்து வரும் காரணத்தினால் அவரது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எனக்கு அழுத்தம் கொடுத்த காரணத்தினால் தான் சாகுபடி செய்யாமலேயே சாகுபடி செய்ததாக வாதி பெயருக்கு சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சான்று எவ்வளவு விஸ்தீரணத்திற்கு என்றால் நியாபகம் இல்லை.

S VIJAY ANANTH

Digitally signed by S VIJAY ANANTH
DN: cn=S VIJAY ANANTH, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.09.11 18:42:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.